

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று (18.02.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை அலுவலக வளாகக் கூட்டரங்கில் 2025 ஆம்ஆண்டு ஜனவரி மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின்பணித் திறன்குறித்தஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. மொ.நா. பூங்கொடி, மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்

### வணிகவரித்துறையில் – நடப்பு நிதி ஆண்டில் – ஜன. 31 வரை

# ரூ.1,13,235 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது!

## அனைத்து இணை ஆணையர்கள் கூட்டத்தில் – அமைச்சர் பி.மூர்த்தி பெருமிதம்!

சென்னை, பிப்.19-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று (18.2.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், வணிகவரித் துறையில் கடந்த 2023-2024 நிதி ஆண்டின் 31.01.2024 வரையிலான வருவாய் ரூ.1,01,234 கோடி. நிகழும் 2024-2025 நிதி ஆண்டின் 31.01.2025 வரையில் ஈட்டப்பட்ட வருவாய் ரூ.1,13,235 கோடி. கடந்த நிதி ஆண்டின் வருவாயுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் 31.01.2025 வரை கூடுதலாக ரூ.12,001 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் ஜி.எஸ்.டி. சட்டம் 2017 பிரிவு 73ன் கீழ் 2017-2018, 2018-2019 (ம) 2019-2020 ஆகிய நிதி ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட வரிவிதிப்பாணைகளில் எழுப்பப்பட்ட கேட்புகளில் நிலுவையிலுள்ள வரித்தொகையை 31.03.2025க்குள் செலுத்தும் பட்சத்தில் நிலுவையிலுள்ள வட்டி மற்றும் தண்டத்தொகை தள்ளுபடி செய்யப்படுவதற்கான திட்டம் ஜி.எஸ்.டி. கவுன்சில் அறிவுறுத்தலின் படி நடைமுறையில் உள்ளது.

எனவே மேற்கண்ட வருடங்களுக்கு வரி நிலுவை பாக்கி வைத்துள்ள சம்பந்தப்பட்ட வணிகர்கள் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தி, வரியை செலுத்தி, ஜி.எஸ்.டி. சட்டம் 2017-ன் பிரிவு 128Aஇல் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வட்டி மற்றும் தண்டத்தொகை செலுத்துவதிலிருந்து தள்ளுபடி பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இது குறித்து ஏதேனும் சந்தேகம் இருப்பின் தங்களது கோட்ட இணை ஆணையர் அலுவலகத்தை தொடர்புகொண்டு தெளிவு பெறலாம்.

இந்த நிதி ஆண்டில் இது வரை பெற்றுள்ள வரி வருவாய் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து சிறப்பாகச் செயல்பட்ட ஆணையர் மற்றும் அலுவலர்களுக்கு அமைச்சர் பாராட்டுத் தெரிவித்து, எஞ்சியுள்ள நாட்களில் ஆக்கபூர்வமாகச் செயல்பட்டு அரசு நிர்ணயித்துள்ள வருவாய் இலக்கினை அடைவதற்கு அனைத்து இணை ஆணையர்களும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதேபோல் வணிகவரி அலுவலகங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், காலிப் பணியிடங்கள் உள்ளிட்ட விவரங்களைக் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

இந்த கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. மொ.நா. பூங்கொடி மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

# சைதை கிழக்கு பகுதி கழக ஆலோசனைக் கூட்டம் !

## பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் அறிவிப்பு!

சென்னை, பிப்.19 -

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை ( 20.02.2025 வியாழக்கிழமை) மாலை 5.30 மணிக்கு (சமூக நலக்கூடம், சக்கர பாணி சாலை, நரசிங்கபுரம்ஸ்ர) கிண்டியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் 13வது மண்டல வார்டு குழு தலைவர் சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர் இரா. துரைராஜ் தலைமை தாங்கி பேசுகிறார்.

பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர், மு.மகேஷ்குமார் மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன் , பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன் மற்றும் தா.மோகன்குமார் எம்.சி , பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு.பாக்கியலட்சுமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள்: நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், சைதை ஆ.வரதன், வே.முருகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

எனவே இக்கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதிக் கழகத்தில் உள்ள மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாகத் தலைவர்கள் (பி.எல்.ஏ2) மற்றும் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி அறிவித்துள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்டம்

# மதுரவாயல் 148 வது வட்ட கழக ஆலோசனை கூட்டம்!

## வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் அறிக்கை!

சென்னை, பிப். 19-

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க. கணபதி அறிவுறுத்தலின் படி மதுரவாயல் 148வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம், நாளை (20.02.2025 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சக்தி சி பிளாக், என்.டி.பட்டேல் ரோட்டில் அமைந்துள்ள ஆர்.ஜெ.மஹாலில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதுபோது வருகின்ற மார்ச் 1 ஆம் தேதி முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா, புதியதாக நியமிக்கப்பட்டுள்ள கழக 23 சார்பு அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி அணிகளின் தலைவர்கள் அறிமுகப்படுத்துதல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது என்று வட்டக் கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 மின் மாற்றிகள் 5 சிந்தாமணி நியாய விலை கடை மற்றும் 2 அமுதம் நியாய விலை கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றம் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார் உடன் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், ஆவடி மாநகராட்சி பணி குழுத்தலைவர் சா.மு.நா.ஆசிம்ராஜா, மண்டல தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், வி.அம்மு , ஜோதிலட்சுமி, பகுதிச் செயலாளர்கள் பேபிசேகர் பொன்விஜயன், ஜி.நாராயண பிரசாத், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு செயலாளர்கள் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்





சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நேற்று (18.2.2025) நடைபெற்றது. இதில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை அனைத்து வட்டங்களிலும் சிறப்பாக கொண்டாடுவது பற்றியும், நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், மாவட்ட / மாநில நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் – தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய

# அடுக்குமாடி குடியிருப்புகளின் பராமரிப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

**சென்னை, பிப்.19-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.2.2025) பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் பராமரிப்பு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு உதவிடும் வகையில் அடுக்குமாடி குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளை பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் மேற்கொள்வது குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறையின் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், துறைகளின் கூடுதல் தலைமைச் செயலாளர்கள், செயலாளர்கள், துறைத் தலைவர்களுடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் சென்னைப் பெருநகரப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளிலும், சாலை பராமரிப்பு, தெரு விளக்கு பராமரிப்பு, பூங்கா பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை போன்ற பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் பராமரிப்பு, கண்காணிப்பு மற்றும் குடிநீர் விநியோகப் பணிகளை சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்கு மாடி குடியிருப்புப் பகுதிகளில் மின்மாற்றிகள், பயன்பாட்டில் உள்ள மின்கம்பிகள், மின் மீட்டர்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து, அனைத்தையும் மழை வெள்ளக் காலங்களில் பாதிக்காத வகையில் உயரமான இடங்களில் மாற்றி அமைக்கவும், மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசித்து வருகின்ற குடியிருப்புவாசிகள் சிறந்த வேலைவாய்ப்புகள் பெறும் வகையில், குறிப்பாக 15,000 இளைஞர்கள், இளம்பெண்களுக்கு விருப்பமான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும் காவல்துறையுடன் இணைந்து தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கவும், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 48 திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்து 15,000 குடும்பங்களுக்கு குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கவும், பராமரிக்கப்பட்டு வரும் குடியிருப்புகளில் மராமத்துப் பணிகளை முடித்து, நல்ல முறையில் பராமரிக்கவும் அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்தின் தலைவர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ. அருண், தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோடக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலாளர் சு.பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய

# ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## ந.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, பிப். 19-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 01.03.2025 சனிக்கிழமை அன்று காலை 07.30 மணி முதல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய நுழைவு வாயிலில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மேள தாளங்கள் முழங்க சிறப்பான முறையில் வரவேற்பு வழங்கப்படுகிறது.

மேலும் 03.03.2025 அன்று, தலைமை அலுவலகம், கோட்ட அலுவலகம் மற்றும் எஸ்டேட் அலுவலகம் ஆகிய இடங்களில் இனிப்பு வழங்கப்படுகிறது.

தாம்பரம் அருகே உள்ள பெரும்பாக்கத்தில் டிரீம் கிட்ஸ் அறக்கட்டளையில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் மார்ச் 31 அன்று முழுவதும் உணவு வழங்கப்படுகிறது.

ஆந்திர மகிளா சபாவில் உள்ள மாற்றுத் திறனாளிகளக்கு மனநலம் குன்றியவர்களுக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

மதுரை மாநகராட்சி மற்றும் தானும் மலையான் நினைவு அறக்கட்டளை இணைந்து நடத்தும் நகர்புற விடாற்றோருக்கான தங்கும் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

திருச்சி கங்காரு மனநலம் காப்பகத்தில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

சேலம் தாமரை உண்மை, ஒற்றுமை மற்றும் சேவை முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை சங்க மாநில பொதுச் செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் ந.சண்முகசுந்தரம் செய்துள்ளார்.

### தாம்பரம் மாநகர்

# பெருங்களத்துர் வடக்குப் பகுதிக் கழகக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் டி.காமராஜ் ஆலோசனை வழங்கினார்!

தாம்பரம், பிப். 19 -

தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. செயற்குழு கூட்டம் மேற்கு தாம்பரம் முடிச்சூர் சாலை அமைந்துள்ள கோன் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி அவைத்தலைவர் டி. ஆர்.கோபி தலைமையிலும் பகுதி துணை செயலாளர்கள் ஜா.ரவிகுமார், ஆர். செல்வகுமார், லிங்கேஸ்வரி பாபு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி. காமராஜ் கலந்து கொண்டு பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகளும் எவ்விதம் செயல்பட வேண்டும் என விளக்க உரையாற்றினார் கூட்டத்தில் பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள்,வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வருகின்ற மார்ச் 1 அன்று பிறந்தநாள் காணும் கழகத் தலைவர்செயல்திட்டங்களையும் தன் உழைப்பால் நம் தாய் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கும் தமிழக மக்கள் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் உயர்ந்த நிலை அடைவதற்கு பாடுபடும் திராவிட மாடல் முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கிடவும் நலத்திட்ட உதவிகள் செய்திடவும் அனைத்து வார்டுகளில் ஒலி ஒளி அமைத்து தெருமுனை கூட்டங்கள் நடத்திடவும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும் தலைவர் அவர்களின் பிறந்தநாளை மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடுவது எனவும்,

வருகின்ற மார்ச் 1,2025 அன்று நம் கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளன்று முதல் எதிர்வர இருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் நம் கழகம் மீண்டும் ஏழாவது முறையாக ஆட்சி அரியணையில் அமர்த்திட நம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள கழக நிர்வாகிகள் பாக நிலை முகவர்கள் மற்றும் பாக நிலை உறுப்பினர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் தீவிரமாக 2026 தேர்தல் வரை இடைவிடாது களப்பணி செய்து மீண்டும் கழக ஆட்சி அமைந்திட உறுதி ஏற்று பணி செய்வோம் என செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.